DEREK PRINCE
MINISTRIES - INDIA

Free copy!



தேவனுடைய வார்த்தை உங்களுக்கு செய்வதென்ன ?

- பகுதி 5

சுத்திகரிப்பு மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல்

தேவனுடைய வார்த்தை நமக்கு என்னவெல்லாம் பகிர்ந்தளிக்கிறதென்று, சிந்திப்பதும், அதை பதிவு செய்வதும் ஒரு அற்புதமான அனுபவம். வேதத்தினுடைய தாக்கத்தினால், நம்முடைய வாழ்வில் வந்த தனிப்பட்ட பலன்களை குறித்து, நாம் ஒவ்வொருவரும் ஒரு பெரிய பட்டியலை உருவாக்கலாம். ஆனால் "தேவனுடைய வார்த்தை உங்களுக்கு செய்வதென்ன ?" என்ற இத்தொடரில், வேதாகமத்தை நாம் ஆராய்ந்து அதை பயிற்றுவிக்கும் போது, அவ்வார்த்தை நமக்காக என்ன செய்கிறதென்ற பரந்த விளைவுகளை நாம் தியானித்து வருகிறோம்.

இத்தொடரின் நான்காவது பகுதியில், புதிய பிறப்பின் மூலம், நாம் பெற்றுக்கொண்ட புதிய ஜீவனை தற்காக்கவும், வலுவூட்டவும், தமது வார்த்தையின் மூலம் தேவன் எப்படி நமக்கு ஆவிக்குரிய ஊட்டச்சத்தை பகிர்ந்தளிக்கிறார் என்பதை நான் விளக்கினேன். இப்போதனை கடிதத்தில், தேவனுடைய வார்த்தையினால் உங்கள் வாழ்வில் உண்டாகும் இன்னும் இரண்டு விளைவுகளை குறித்து நாம் ஆராயப்போகிறோம்: சுத்திகரிப்பு மற்றும் பரிசுத்தமாக்குதல்.

வார்த்தையினால் கழுவப்படுதல்

இப்பாடத்தை துவக்க எபேசியர் 5:25-27ஐ நாம் பார்க்கலாம். இவ்வார்த்தைகளை, பவுல் கணவன்மாரிடம் கூறினாலும், அவர் கூறுவதின் மைய கருத்து மனித கணவன்மாரையும், அவர்கள் மனைவிகளுடன் இருக்கும் உறவை குறித்து மட்டும் இல்லை. மாறாக, மணவாளனாகிய கிறிஸ்துவுக்கும், அவருடைய மணவாட்டி திருச்சபைக்கும் உள்ள உறவையே இது குறிக்கின்றது. இப்பகுதியில், நமது இரட்சகரும், ஆண்டவரும், சபையின் மணவாளனுமாகிய கிறிஸ்து, தமது மக்களுக்கு செய்திருக்கும் இரண்டு முக்கிய ஏற்பாடுகளை பவுல் குறிப்பிடுகிறார்:

> *. . .தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிறை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.*

தமது ஜனமாகிய சபையின் நன்மைக்காக இயேசு ஏற்பாடு செய்திருக்கும் இரண்டு முக்கிய காரியங்களை நாம் இங்கு காண்கிறோம். முதலாவதாக, இயேசு சபைக்காக, தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். தமது ஜனம் மீட்கப்படும்படியாக, கல்வாரி சிலுவையில் அவர் தமது இரத்தத்தை சிந்தி மரித்தார்.

ஆகவே, அந்த முதல் ஏற்பாடு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் பூரண மீட்பு. தமக்காக நம்மை மீட்டெடுத்தார். ஆனால், அதின் நோக்கம் என்ன ? தமது இரத்தத்தினால்

WGWWDFY5 TAMIL.indd 1 9/7/2018 11:16:37 AM

நம்மை மீட்டதின் நோக்கம் இன்னொன்று உண்டு: திருவசனத்தைக்கொண்டு, நம்மை தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குவதற்கு. திருவசனம் என்று இங்கு கூறப்படுவது, தேவனுடைய வார்த்தையே. வேதாகமத்தில் பல இடங்களில் கூறப்படும் கருத்தையே இதுவும் பிரதிபலிக்கிறது. அங்கெல்லாம் தேவனுடைய வார்த்தை சுத்த ஜலத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. அது நம்மேல் கிரியை செய்யும் போது, நம்மை சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறது. தமக்கு மணவாட்டியாக வேண்டும் என்று இயேசு கிறிஸ்து விரும்பும் ஒரு சபையாக மாற, இவ்விரண்டு ஏற்பாடுகளும் நமக்கு அவசியம் என்று எபேசியரில் இவ்வசனம் நமக்கு காட்டுகின்றது.

தண்ணீர் என்ன செய்கிறது

முதலாவது, நாம் இயேசுவின் இரத்தத்தாலே மீட்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் அறிந்துக்கொள்ள வேண்டும். ஆனால், அது மட்டும் அல்ல. அதையும் தாண்டி, நாம் பரிசுத்தமும் குற்றமற்றவர்களாயும் இருக்க, தேவனுடைய வார்த்தை நமது இருதயங்கள், சிந்தைகள் மற்றும் வாழ்வினை சுத்திகரித்து, பரிசுத்தமாக்க, அதின் கிரியைக்கு நம்மை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த தேடல், தேவன் நமக்கு வைத்திருக்கும் மா பெரிய இலக்காகும். ஆனால், தேவனே அந்த இலக்கை தீர்மானித்த படியால், அதை அடைவதற்கான வழிகளையும், அவரே நமக்கு தந்திருக்கிறார்.

இத்தருணத்தில், சுத்திகரிப்பு மற்றும் பரிசுத்தமாக்கப்படுதலுக்குமுள்ள வித்தியாசத்தை தெளிவாக புரிந்துக்கொள்வது அவசியமாகும். "சுத்திகரிப்பு" என்பது, நாம் அன்றாட வாழ்விலும் அறிந்த ஓர் வார்த்தையாகும். அதற்கு அர்த்தம், சுத்தமாக்குவது அல்லது தூய்மைப்படுத்துவது. தேவனுடைய வார்த்தையின் முதல் கிரியை நம்மை தூய்மைப்படுத்துவதாகும். அவர் வார்த்தையின் மூலம், தேவன் நமது மனதையும், இருதயங்களையும், சிந்தைகளையும், நோக்கங்களையும் சுத்திகரிக்கிறார். பாவகரமானதும், அசுத்தமானதும், நம்மை இழிவுப்படுவதையும் அவர் கழுவி, நம்மை விட்டு நீக்குகிறார்.

அதுவுமல்லாமல், தேவன் நம்மை பரிசுத்தமாக்குகிறார். "பரிசுத்தமாக்குதல்" என்ற வார்த்தை, சாதாரண மக்களை பயமுறுத்தும் ஒரு மத சம்பந்தமான வார்த்தையாக உள்ளது. 'ஆக்குதல்' அல்லது 'ஆகுதல்' என்ற முடிவு ஒரு வார்த்தைக்கு இருக்கும் போது, அவ்வார்த்தையின் முதல் பகுதியில் கூறப்படுவது போல் மாற்றப்படுவது என்று அதற்கு பொருளாகும். ஆகவே சுத்திகரித்தல் என்பது, "சுத்தமாக மாறுவதாகும்." சுத்திகரிக்கப்படுதல் என்பது "சுத்தமாக்கப்படுவதாகும்." அதே போல், பரிசுத்தமாகுதல் என்பது, "பரிசுத்தமாக மாறுவதாகும்." பரிசுத்தமாக்குதல் என்பது "பரிசுத்தமாக்கப்படுவதாகும்." பரிசுத்தம் என்ற வார்த்தையும் பரிசுத்தவான் என்பதும் மூல பாஷையில் ஒரு வார்த்தை தான். ஆகவே, பரிசுத்தவான் என்பது, மிகவும் பரிசுத்தமாயிருக்கும் ஒருவரை குறிக்கும் வார்த்தை. எளிதாக சொன்னால், பரிசுத்தமாக்குதல் என்பது, நம்மை "பரிசுத்தமாக்குவதாகும்."

பரிசுத்தமாக்கப்படுதலில் இரண்டு அம்சங்கள் உண்டு: முதலாவது, எதிர்மறையானது; இரண்டாவது முன்னேற்றத்திற்குரியது. பரிசுத்தமாக்கப்படுதலில் எதிர்மறையான அம்சம், பிரித்தெடுக்கப்படுவதாகும். அசுத்தமான மற்றும் தேவனுக்கேற்புடையதல்லாத எல்லா பாவத்திலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்டு, தேவனுக்கென்று பிரித்துவைக்கப்படுதல். ஆனால், அதை தாண்டி, பரிசுத்தமாக்கப்படுதலுக்கு ஓர் நேர்மறையான அம்சமும் உண்டு. அது, தேவனுடைய பரிசுத்தத்தில் பங்கடைவதாகும் - அதாவது, தேவனுடைய பரிசுத்தத்தைக்கொண்டு, பரிசுத்தமாக்கப்படுதல். எபிரெயர் 12, 10ம் வசனம் முதல் 14ம் வசனம் வரை இதை நாம் தெளிவாக காண்கிறோம். 10ம் வசனத்தில், மனித தகப்பன்மாருடைய ஒழுங்குப்படுத்துதலுக்கும், நம்முடைய பரம தகப்பனாகிய தேவனுடைய ஒழுங்குபடுத்துதலுக்கும் உள்ள தொடர்பை குறித்து எழுத்தாளர் பேசுகிறார்:

> *அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, நம்முடைய பிரயோஜனத்திற்காகவே நம்மை சிட்சிக்கிறார்.*

தேவனுடைய ஒழுங்குபடுத்துதல் மற்றும் இடைப்படுதலுக்கு இறுதியான நோக்கம், நாம் அவருடைய பரிசுத்தத்தில் பங்கடைய வேண்டும் என்பதே, என்று இங்கு காண்கிறோம். பரிசுத்தத்தின் இந்த அனுபவம் வெறும் எதிர்மறையானது மட்டும் அல்ல - அதாவது பாவத்திற்கும், அசுத்தத்திற்கும் விலகி இருப்பது மட்டும் அல்ல. இதில் நேர்மறையான பகுதி, தேவனுடைய பரிசுத்தத்தை கொண்டு பரிசுத்தமாகும்படி, அவருடைய தன்மையையும் பரிசுத்தத்தையும் நமக்குள் பெறுவதாகும். இந்த இலக்கின் நோக்கம் என்ன? 14ம் வசனத்தில் பதிலைக்காண்கிறோம். பரிசுத்தத்தைக்குறித்து பேசிக்கொண்டே, எழுத்தாளர் இவ்வாறாக கூறுகிறார்:

> *யாவரோடும் சமாதானமாயிருக்கவும்,*
> *பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்;*
> *பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத்*
> *தரிசிப்பதில்லையே.*

இது மிக கெம்பீரமான உண்மை: நாம் தேவனை காண வேண்டுமானால், நாம் பரிசுத்தமாக வேண்டும். இது எப்படி சாத்தியம்? "திருவசனத்தைக்கொண்டு, தண்ணீர் முழுக்கினால்" நம்மை பரிசுத்தமாக்குவதே, தேவன் செய்திருக்கும் ஏற்பாடு. அவருடைய வார்த்தை நம்மை கழுவுகின்றது, சுத்திகரிக்கவும் செய்கிறது - இப்படியாக நம்மை முற்றிலும் தூய்மையாக்கி, பரிசுத்தமாக்குகிறது.

மதத்தின் சிக்கவைக்கும் பொறி

தேவனுடைய வார்த்தை என்னும் தண்ணீரால் கழுவப்படுதல் என்ற கோட்பாடு நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இன்றியமையாதது. ஆனால் தேவன் நமக்குள் கிரியை செய்து,

நம்மை பரிசுத்தமாக்கும் வழிமுறைக்கும், மதத்தால் அடிக்கடி பயன்படுத்தப்படும் வழிமுறைக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உண்டு. மதம் புறம்பே ஆரம்பித்து, உள்ளே கிரியை செய்ய முற்படுகிறது. அது புறம்பான காரியங்களில் ஆரம்பித்து, “இதை செய்யாதே, அதை செய்யாதே, அப்பொழுது பரிசுத்தமாய் இருப்பாய்" என்று கூறுகிறது. இத்தகைய மதத்தை சார்ந்த பரிசுத்தத்தை இயேசு மத்தேயு 23ல் எதிர்க்கிறார் - அது போதுமானதல்ல மற்றும் திருப்தி செய்யாதது என்று அதைத்தள்ளிவிடுகிறார். பரிசேயர் சதுசேயருக்கு இருந்த பரிசுத்தத்தை குறித்து, நமது ஆண்டவர் அளிக்கும் விரிவுரை இதோ - இயேசு அவர்களிடம் சொல்லுகிறார்:

> *மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே. குருடனான பரிசேயனே! போஜனபாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு.*

இயேசு, அவர்களிடம்: “பரிசேயரே! நீங்கள் தொடர்ந்து கோப்பை மற்றும் பாத்திரத்தின் வெளிப்புறத்தை மட்டும் சுத்தம் செய்துக்கொண்டிருக்கிறீர்கள், ஆனால் உள்ளே இருப்பதை இன்னும் சுத்தம் செய்யவில்லை. நீங்கள் எத்தனை முறை சுத்தம் செய்ய முயற்சித்தாலும், உள்ளே இருப்பது, மறுபடியும் வெளிபுறத்தை அழுக்காக்கிவிடும்" என்கிறார். இத்தகைய மதத்தின் தவறு என்னவென்றால், அது புறம்பே துவங்கி, உள்ளே மனிதனை சுத்தம் செய்ய முற்படுகிறது. சபையின் பல பகுதிகளில் இம்முயற்சி வெளியரங்கமாக உள்ளது. அங்கே, மனிதனால் வடிவமைக்கப்பட்ட சில சட்டங்களை பின்பற்றுவதே பரிசுத்தம் அடைவதற்கு வழி என்று கிறிஸ்தவர்களுக்கு போதிக்கப்படுகிறது. அந்த வழிமுறையில் ஒரே பிரச்சனை தான் இருக்கிறது: அது மனிதனை உள்ளான நிலையில் ஒரு போதும் மாற்றுவதில்லை.

இதற்கு எதிர்மறையாக, நம்மை உள்ளிருந்து வெளியே பரிசுத்தமாக்குவதே தேவனுடைய வழிமுறை என்பதை மத்தேயு 5:8ல் உள்ள, இயேசுவின் வார்த்தைகளிலிருந்து நாம் காண்கிறோம்.

> *இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.*

உங்கள் இருதயம் தூய்மையாய் இருந்தால், அந்த நிலை உங்களை தேவனுடைய பிரசன்னத்திற்குள் நேரடியாக அழைத்து செல்லும். நீங்கள் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாய் இருந்தால், அதின் விளைவாக, உங்கள் வார்த்தைகள், எண்ணங்கள் மற்றும் செயல்கள் எல்லாம் சுத்தமாய் இருக்கும். நீதிமொழிகள் 4:23, ஜீவ ஊற்றுகள் இருதயத்தில் இருந்து புறப்படும் என்று நமக்கு நினைப்பூட்டுகிறது. உங்கள் இருதயத்திலிருந்தே உங்கள் வாழ்க்கையின் எல்லா காரியங்கள் புறப்படும். சுத்தமுள்ள இருதயம் இல்லாமல், சுத்தமுள்ள வாழ்க்கையை உடையவர்களாய் இருப்பது சாத்தியமற்றது.

நம்முடைய மனதை புதிதாக்குதல்

ஒரு தூய இருதயத்தை நமக்குள் உருவாக்குவது எப்படி? நம்முடைய மனதை புதிதாக்குவதினால், அதாவது நாம் சிந்திக்கும் விதத்தை புதிதாக்குவதே, நம்மை உள்ளாக தூய்மையாக்க தேவன் பயன்படுத்தும் வழியாகும். இது ரோமர் 12:2ல் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது.


> *நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல். தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*

பவுலின் இந்த வார்த்தையில், கட்டளை மிகவும் தெளிவாக உள்ளது. இயேசு கிறிஸ்துவை சேவிக்காத, தேவனை கனம்பண்ணாத உலகத்தின் மக்களைப்போல் நாம் இருக்கக் கூடாது. நாம் வித்தியாசமாக இருக்க வேண்டும். நாம் மாற்றப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆனால் அந்த மாற்றம் எப்படி நடக்கின்றது? நாம் மாற்றப்பட வேண்டும் - ஆனால் புறம்பான சட்டங்கள், கட்டுப்பாடுகளால் அல்ல - மாறாக நம்முடைய மனம் புதிதாகிறதினாலே மாற்றம் வர வேண்டும். நமக்குத் தேவையான அந்த மாற்றம், நமக்குள் இருந்து வர வேண்டும். ரோமர் 12ல் உள்ள இந்த பகுதியில், நம்முடைய மனம் புதிதானால், நாம் அனுபவ ரீதியாக, எது நல்லது, எது பிரியமானது, எது பரிபூரணமானது என்பதை அறிந்து கொள்ள முடியும் என்று பவுல் கூறுகிறார். சுருக்கமாகச் சொன்னால், நம்முடைய வாழ்விற்கான தேவனுடைய உண்மையான சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்வோம். புதிதாக்கப்படாத மனதிற்கு, தேவனுடைய சித்தம் வெளிப்படுத்தப்படுவது இல்லை என்பதை கவனியுங்கள். புதிதாக்கப்பட்ட மனது தான் தேவனுடைய சித்தத்தை ஏற்று, அதற்குள் பிரவேசிக்க

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி *secretary@derekprince.in* அல்லது அலைபேசி *9585538202* தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் கவனத்திற்கு !!

உங்கள் விலாசம் மாறும்பொழுது தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்



இன்னும் தேவையா ?

○ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.

○ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.

○ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்

See over for address details...



பதிவு செய்க !

○ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.

○ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.

○ கடிதம் மூலமாக அனுப்பவும்

முடியும்.

இப்போது, ஒரு மிக முக்கியமான கேள்வி. தேவனுடைய வார்த்தை நம்முடைய மனதை எப்படி புதிதாக்குகிறது? இந்த புதிதாக்குதலின் செயல் தொடரை குறித்து, மூன்று கட்டங்களில் நாம் யோசிக்கலாம். முதலாவது, வார்த்தை எல்லா அசுத்தத்தையும் கழுவி விடுகிறது. அசுத்தமான எண்ணங்கள், அசுத்த பேச்சு மற்றும் பொல்லாத இச்சைகளற அது நம்மை கழுவுகிறது. அந்த தன்மை நம்மைவிட்டு நீங்க நம்மை கழுவுகிறது.

இரண்டாவதாக, நம்முடைய நடத்தை முறைகளின் மதிப்பீட்டை மாற்றுகிறது. நாம் வேறு அளவுகோல்களின் படி செயலாற்ற ஆரம்பிக்கின்றோம். காரியங்களை நாம் வித்தியாசமாக காண ஆரம்பிக்கிறோம். தேவன் மதிப்பிடும் விதத்தில் எல்லாவற்றையும் மதிப்பிட ஆரம்பிக்கின்றோம். பாவத்தை பாவம் என்றும், நீதியை நீதி என்றும் அழைக்க ஆரம்பிக்கிறோம். தேவனுக்கு பிரியமல்லாத காரியங்களுக்கு அலங்கார மனோதத்துவ பெயர்களைக் கொடுத்து, ஏமாற்றப்படுவதை தவிர்க்கிறோம்.

மூன்றாவதாக, நமக்குள் கிரியை செய்யும் தேவனுடைய வார்த்தை, தேவனுடைய நோக்கங்கள் உடன் நம்மை ஒத்துப் போகச்செய்கிறது. நம்முடைய நோக்கங்கள் மாற்றம் அடைகின்றன. நமக்கு என்ன தேவை என்பதை குறித்து நாம் கவலைக்கொள்வதில்லை. மாறாக தேவனுக்கு என்ன பிரியம் என்பதே நம்முடைய மிகப்பெரிய வாஞ்சையாக மாறுகிறது. பூமியில் தேவனுடைய நோக்கங்களின் நிறைவேறுதலுடன் நம்மை இணைத்துக்கொள்கிறோம். “உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று கர்த்தருடைய ஜெபத்தில், இயேசு நமக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்ததே நம்முடைய வாழ்வில் எல்லாவற்றிலும் மேன்மையான நோக்கமும் வாஞ்சையாகவும் மாறுகின்றது. தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படுவதை காண்பதே நம்முடைய மிகப்பெரிய வாஞ்சையாக மாறுகிறது. இந்த நோக்கம், நம்முடைய வாழ்வில் இவ்வளவு முதன்மை பெற்றால், வேறு விதமாக வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை.

இந்த மாற்றங்கள் எல்லாம் நம்முடைய மனதில் வந்துவிட்டால், நம்முடைய வெளியரங்க நடத்தையில் அது பிரதிபலிக்கப்படும். தெளிவாக, இந்த செயல் தொடரை தேவன் நம்முடைய வாழ்வில், தமது வார்த்தையினால் மனதை மறுரூபமாக்குவதினால் தொடங்கி வைக்கிறார்.

தேவன் இந்த மாற்றங்களை உங்கள் வாழ்வில் செய்யும் படி அவரை வேண்டிக்கொண்டீர்களா? உங்களை கழுவி சுத்திகரிக்க தேவனுடைய வார்த்தைக்கு இடம் தந்து, அவருடைய ராஜ்யத்தை உங்கள் மிக உயர்ந்த முன்னுரிமையாக மாற்றின நிச்சயம் உண்டா? அல்லது அதை இப்போது செய்யவோ, இதற்கு மறு அர்ப்பணிப்பு செய்யவோ விரும்புகிறீர்களா? பின் வரும் ஜெபத்தை என்னுடன் சேர்ந்து செய்யுங்கள்.

ஆண்டவராகிய இயேசுவே, இப்போதனையின் மூலம் நான் கண்டடைந்த ஒவ்வொரு கோட்பாட்டிலும் முழுமையாக நடைபோட வாஞ்சிக்கிறேன். உமது இரத்தத்தால் என்னை மீட்டெடுத்ததற்காக நன்றி. உம்முடைய வார்த்தையின் கழுவுதலால் என்னை சுத்திகரித்து முற்றிலும் பரிசுத்தமாக்கும். உமது பார்வையில் பரிசுத்தமாய் காணப்பட மதம் சார்ந்த வழிகளை பின்பற்றும் போக்கிலிருந்து என்னை தப்புவியும். எனக்குள் உம்முடைய செயல்தொடரை துவங்கும். என் இருதயத்தை தூய்மையாக்கி, என் மனதை புதிதாக்கும். இந்த செயல் தொடருக்கு என்னை முற்றிலுமாய் திறந்து கொடுத்து, புவியில் உமது ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட என்னை அர்ப்பணிக்கிறேன். அது என் வாழ்விலிருந்து துவங்கட்டும். உமது விலையேறப்பெற்ற வார்த்தையினால் நீர் எனக்குள் செய்யும் கிரியைக்காக நன்றி ஆண்டவரே. ஆமென்.

TAKEN FROM THE DEREK PRINCE LEGACY RADIO SERIES

“WHAT GOD’S WORD WILL DO FOR YOU.” - Part 5 of 6

உங்கள் விபரம்

பெயர் ....

விலாசம்: ....

....

தொலைபேசி: .... பின்கோடு: ....

இமெயில்: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince Ministries - India

Contact us

www.derekprince.in

admin@derekprince.in
Ph 9585538205

1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017